தமிழ்

# விவசாயக்கடன் தள்ளுபடி மற்றும் கடன் நிவாரண திட்டம், 2008

## 1) அறிமுகம்:

1.1. மத்திய நிதி அமைச்சர் தனது 2008 - 2009 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் விவசாயிகளுக்கான கடன் தள்ளுபடி மற்றும் கடன் நிவாரணத் திட்டம் ஒன்றினை அறிவித்திருந்தார்.

1.2. இத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

## 2) வாய்ப்புகள்:

2.1. ஷெட்யூல்டு வர்த்தக வங்கிகள், மண்டல கிராமிய வங்கிகள், கூட்டுறவுக் கடன் வழங்கும் நிறுவனங்கள் (நகர்புற கூட்டுறவு வங்கிகள் உள்பட) உள்ளூர் பகுதி வங்கிகள் (லோக்கல் ஏரியா வங்கிகள்) ஆகியவை சிறு, குறு மற்றும் இதர விவசாயிகளுக்கு நேரடியாக வழங்கியுள்ள கடன்கள் இத்திட்டத்தின் கீழ் வரும்.

2.2. இத்திட்டம் உடனடியாக நடைமுறைக்கு வரும்.

## 3) விளக்கம்:

3.1. நேரடி விவசாயக்கடன்:

குறுகியகால வேளாண் உற்பத்தி மற்றும் முதலீட்டிற்காக விவசாயிகளுக்கு நேரடியாக வழங்கப்பட்டுள்ள கடன்கள் நேரடி விவசாயக்கடன்களாகும். தனிப்பட்ட விவசாயிகள் ஒருங்கிணைந்து குழுக்களாகச் செயல்படுபவர்களுக்கு (சுய உதவிக்குழுக்கள் மற்றும் கூட்டுக் பொறுப்பு குழுக்கள்) நேரடியாக வழங்கப்பட்டுள்ள கடன்களுக்கும் இது பொருந்தும். எனினும், இத்தகைய குழுக்களில் இணைந்துள்ள ஒவ்வொரு விவசாயிக்கும் தனித்தனியாக வழங்கிய கடன் விவரங்களை வங்கிகள் பராமரித்திருக்க வேண்டும்.

3.2. குறுகிய கால உற்பத்திக் கடன்:

18 மாதங்களுக்குள் திருப்பிச் செலுத்தக்கூடிய பயிர் சாகுபடிக் கடன்கள் குறுகிய கால உற்பத்திக் கடன்களாக கருதப்படும். ரூபாய் ஒரு லட்சத்திற்கு உட்பட்ட நடைமுறைச் செலவிற்காக பாரம்பரிய மற்றும் பாரம்பரியம் இல்லாத தோட்டப் பயிர்கள் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கான கடன்களும் இதில் அடங்கும்.

- / -

3.3. முதலீட்டுக் கடன்:

அ) பயிர்களைப் பராமரித்தல், வீணாகும் சொத்துக்களை பராமரித்தல், நிலத்தில் இருந்து கூடுதல் மகசூல் பெறுவதற்காக செய்யப்படும் முதலீட்டு தேவைகள், அதாவது, கிணறுகளை ஆழப்படுத்துதல், புதுக் கிணறு தோண்டுதல், பம்ப்செட் நிறுவுதல், டிராக்டர் வாங்குதல், உழவு மாடு வாங்குதல் மற்றும் நிலம் மேம்பாடு, பாரம்பரிய மற்றும் பாரம்பரியம் இல்லாத தோட்டப் பயிர் மற்றும் தோட்டக் கலை பயிர்களுக்காக நேரடியாக வழங்கப்படும் மத்திய / நீண்ட விவசாயக்கடன் இதில் அடங்கும்.

ஆ) பண்ணைசார் தொழில்கள் - பால்பண்ணை, கோழிபண்ணை, ஆட்டுபண்ணை, பன்றிவளர்ப்பு, மீன்வளர்ப்பு, தேனீ வளர்த்தல், பசுமை இல்லம் அமைத்தல், சாணஎரிவாயுக் கலன் போன்ற பண்ணைசார் தொழில்களை அமைப்பதற்கு தேவையான சொத்துக்கள் வாங்குவதற்கு கொடுக்கப்பட்ட கடன்களும் முதலீட்டுக் கடனாகக் கருதப்படும்.

3.4. கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள்:

i) விவசாயிகளுக்கு குறுகிய காலப் பயிர்கடன் வழங்கவும் மற்றும் அதற்கான வட்டிச் சலுகையை மத்திய அரசிடம் இருந்து பெறத்தகுதி உடைய கூட்டுறவு சங்கங்கள்.

ii) பாரத ரிசர்வ் வங்கி மற்றும் தேசிய விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) ஆகியவற்றின் மேற்பார்வை அல்லது கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட கூட்டுறவுக் கடன் சங்கங்கள்.

iii) மாநில அல்லது யூனியன் பிரதேசத்தில் அமைந்துள்ள குறுகிய கால கூட்டுறவுக்கடன் அமைப்பு அல்லது நீண்ட கால கூட்டுறவுக் கடன் அமைப்பு.

3.5. குறு விவசாயி:

ஒரு ஹெக்டேர் வரை (2.5 ஏக்கர்) உள்ள விவசாய நிலத்தில் (சொந்தமாகவோ, குத்தகைக்கோ அல்லது விளைச்சல் பங்குதாரராகவோ) பயிர் செய்யும் விவசாயி குறுவிவசாயி எனக் கருதப்படுவார்.

3.6. சிறு விவசாயி:

ஒரு ஹெக்டேருக்கு (2.5 ஏக்கர்) மேலும் இரண்டு ஹெக்டேருக்குள்ளாகவும் (5 ஏக்கர்) உள்ள விவசாய நிலத்தில் (சொந்தமாகவோ, குத்தகைக்கோ அல்லது விளைச்சல் பங்குதாரராகவோ) பயிர் செய்யும் விவசாயி சிறு விவசாயி எனக் கருதப்படுவார்.

3.7. இதர விவசாயி:

இரண்டு ஹெக்டேருக்கு (5 ஏக்கர்) அதிகமான நிலத்தில் (சொந்தமாகவோ, குத்தகைக்கோ அல்லது விளைச்சல் பங்குதாரராகவோ) பயிர் செய்யும் விவசாயி இதர விவசாயி எனக் கருதப்படுவார்.

விளக்கங்கள்

1) கடன் வழங்கப்பட்டபோது ஒரு விவசாயி எவ்வளவு நிலத்தில் தனிப்பட்ட முறையிலோ அல்லது பிறருடன் இணைந்தோ (சொந்தமாக) அல்லது மொத்தம் எவ்வளவு நிலத்தில் (குத்தகைகாரராகவோ அல்லது விவசாய பங்குதாரராகவோ) பயிர் செய்தாரோ அந்த அளவு நிலம் மட்டுமே மேற்கண்ட நில உடமை பிரிவின்படி கடன் தள்ளுபடிக்கு அடிப்படையாக எடுத்துக் கொள்ள வேண்டும். நிலத்தில் உரிமையிலோ, அளவிலோ பின்னர் ஏற்படும் மாற்றங்கள் இத்திட்டத்திற்குப் பொருந்தாது.

2) ஒன்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் ஒன்றிணைந்து தங்களது நிலங்களை இணைத்துக் கடன் பெற்றிருந்தால், அவர்களில் எவருடைய நிலத்தின் அளவு மிக அதிகமாக உள்ளதோ அதன் அடிப்படையிலேயே அந்த குழுவில் உள்ள விவசாயிகள் ஒவ்வொருவரையும் குறு, சிறு அல்லது இதர விவசாயி என இனங்காணப்படுவார்.

3) பண்ணைசார் செயல்களுக்காக (கோழிப்பண்ணை, ஆடு வளர்ப்பு மற்றும் இதர பண்ணை சார்ந்த தொழில்கள்) ரூ.50,000/-வரை முதலீட்டுக் கடன் (அசல்) பெற்றவர் குறு மற்றும் சிறு விவசாயிகள் எனவும், ரூ.50,000/-ற்கு மேல் முதலீட்டுக் கடன் (அசல்) பெற்றவர் இதர விவசாயிகள் எனவும் கருதப்படுவர். இவ்வாறு தீர்மானிப்பதற்கு அவர்கள் பயிரிடும் நிலத்தின் அளவைக் கணக்கில் கொள்ள வேண்டியதில்லை.

4) விவசாயக்கடன் அட்டை (கிசான் கிரெடிட் கார்டு) மூலம் நேரடி விவசாயக்கடன் பெற்றவர்களுக்கும் இத்திட்டம் பொருந்தும்.

5) குறுகியகால உற்பத்திக் கடன் மற்றும் முதலீட்டுக் கடன் இரண்டையும் ஒரு விவசாயி பெற்றிருந்தால் அவை இரண்டும் தனித்தனிக் கடன்களாக இத்திட்டத்தின் கீழ் கருதப்படும். இதனைப்போலவே ஒரு விவசாயி இரண்டு முதலீட்டுக் கடன்கள் வெவ்வேறு காரியத்திற்கு வாங்கி இருந்தால் அவையும் இத்திட்டத்தின் கீழ் தனித்தனி கடன்களாகவே கருதப்படும்.

4. தகுதித் தொகை:

கடன் தள்ளுபடி அல்லது கடன் நிவாரணத்திற்குரிய தொகை (தகுதித் தொகை) கீழ்கண்டவாறு தீர்மானிக்கப்படும்.

அ) குறுகியகால உற்பத்திக்கடன் (அசல் மற்றும் உரிய வட்டியின் கூட்டுத்தொகை)

i) 31.03.2007 வரை வழங்கப்பட்டு 31.12.2007ஆம் தேதி அன்று தவணை தவறிய கெடு கடந்த கடனாக கருதப்பட்டு 29.02.2008 வரை செலுத்தப் படாமல் இருத்தல் வேண்டும்.

ii) 2004 மற்றும் 2006ல் மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட சிறப்பு சலுகைகளின் அடிப்படையில் திருத்தி அல்லது மாற்றி அமைக்கப்பட்ட தொகை தவணை பாக்கி தவறினாலும் தவறாமல் இருந்தாலும் இத்திட்டம் பொருந்தும்.

iii) 31.03.2007ஆம் தேதி வரை ரிசர்வ் வங்கி வழிக்காட்டு நெறிகளின் படி இயற்கைச்சீற்றங்களினால் ஏற்பட்ட இழப்புகளுக்காக திருத்தி அல்லது மாற்றி அமைக்கப்பட்ட கடன்கள் தவணைத் தவறினாலும் தவறாமல் இருந்தாலும் இத்திட்டம் பொருந்தும்.

ஆ) முதலீட்டுக் கடன்களைப் பொறுத்தவரை கடன் தவணைகள் செலுத்தப் படாமல் (அசல் மற்றும் வட்டி) இருந்தால்

i) 31.03.2007 வரை வழங்கப்பட்டு 31.12.2007ஆம் தேதி அன்று வாராக் கடனாக கருதப்பட்டு 29.02.2008 வரை செலுத்தப் படாமல் இருத்தல் வேண்டும்.

ii) 2004 மற்றும் 2006ல் மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட சிறப்பு சலுகைகளின் அடிப்படையில் திருத்தி அல்லது மாற்றி அமைக்கப்பட்ட கடன்கள்.

iii) 31.03.2007ஆம் தேதியாக ரிசர்வ் வங்கி வழிக்காட்டு நெறிகளின் படி இயற்கைச்சீற்றங்களினால் ஏற்பட்ட இழப்புகளுக்காக திருத்தி அல்லது மாற்றி அமைக்கப்பட்ட கடன்கள்.

(குறிப்பு: 31.03.2007 வரை வழங்கப்பட்ட கடன் வாராக்கடனின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தாலும் அல்லது கடன் வசூலுக்காக வழக்குகள் போடப்பட்டிருந்தாலோ 31.12.2007 தேதியில் எவ்வளவு தொகை கெடு கடந்த பாக்கி தொகையாக (overdue) உள்ளதோ அத்தொகை மட்டுமே நிவாரணத்திற்குத் தகுதி பெறும்.)

4.2. தகுதித் தொகையை தீர்மானிப்பதற்குக் கீழ்க்கண்ட கடன்கள் கணக்கில் கொள்ளப்பட மாட்டாது.

அ) விவசாய விளைப்பொருட்களின் பிணையத்தின்மீது அல்லது அடமானத்தின்மீது வழங்கப்பட்ட கடன் ( நிலத்தில் உள்ள பயிர் இதில் சேராது).

ஆ) பொது நிறுவனங்கள் (கம்பெனிகள்), கூட்டு நிறுவனங்கள், கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அல்லாத இதர சங்கங்கள (பத்தி 3.4ல் குறிப்பிட்டுள்ளவை) மற்றும் இது போன்ற அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள்.

4.3. இத்திட்டத்தின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எதுவும் 31.03.1997 முன்பு வழங்கப்பட்ட கடன்களுக்கு பொருந்தாது.

5. கடன் தள்ளுபடி

5.1. குறு மற்றும் சிறு விவசாயிகளைப் பொறுத்தவரை தகுதித் தொகை முழுவதும் தள்ளுபடி செய்யப்படும்.

6. கடன் நிவாரணம்

6.1. இதர விவசாயிகளைப் பொறுத்தவரை ஒரே தவணைத்தீர்வு முறை கடைபிடிக்கப்படும். இதன்படி கடன் தகுதித் தொகையில் 25% தள்ளுபடி செய்யப்படும். இச்சலுகையைப் பெறுவதற்கு மீதி 75% தொகையை விவசாயி முழுவதும் செலுத்த வேண்டும்.

தவிர, அட்டவணை - 1ல் குறிப்பிட்டுள்ள வருவாய் மாவட்டங்களிலுள்ள இதர விவசாயப் பிரிவினருக்கு ஒரே தவணைத்தீர்வு முறையில் (OTS) தகுதித் தொகையில் 25% தள்ளுபடி அல்லது ரூ. 20,000/ இதில் எது அதிகமோ அத்தொகை நிவாரணமாக வழங்கப்படும். மேலும் மீதித்தொகை(75%) முழுவதையும் விவசாயி செலுத்த வேண்டும்.

7. அமலாக்கம்:

7.1. இத்திட்டத்தின் கீழ் வரும் ஷெட்யூல்டு வர்த்தக வங்கி, நகர்ப்புற கூட்டுறவு வங்கி, மண்டல கிராமிய வங்கி, கூட்டுறவு கடன் நிறுவனம், லோக்கல் ஏரியா வங்கிகளின் ஒவ்வொரு கிளையும் இரண்டு பட்டியல்கள் தயாரிக்க வேண்டும். ஒரு பட்டியல் கடன் தள்ளுபடிக்கு உரிய குறு மற்றும் சிறு * விவசாயிகள் பெயரைக் கொண்டதாகவும், மற்றது இதர விவசாயிகள் பெயரைக் கொண்டதாகவும் அமையும். இப்பட்டியலில் ஒவ்வொரு விவசாயியிடம் உள்ள நிலத்தின் அளவு, தகுதித் தொகை, கடன் தள்ளுபடி அல்லது கடன் நிவாரணம் வழங்க வேண்டிய அளவு ஆகிய விவரங்கள் இப்பட்டியலில் இடம் பெற வேண்டும். இப்பட்டியல்கள் 30.06.2008க்கு முன்பாக ஒவ்வொரு வங்கி அல்லது சங்க கிளையின் அறிவிப்புப் பலகையில் தெரியபடுத்த வேண்டும்.

7.2. தகுதித் தொகை தள்ளுபடிக்குப் பின்னர் ஒவ்வொரு குறு மற்றும் சிறு விவசாயியும் புதிய வேளாண் கடன் பெறத் தகுதி உடையவர் ஆவார்.

7.3. ஒரே தவணைத்தீர்வுக்குரிய இதர விவசாயியாக இனம் காணப்பட்டவர் செலுத்த வேண்டிய தொகையை 3 தவணைகளில் திருப்பிச் செலுத்துவதாக உத்திரவாதப் பத்திரம் அளிக்க வேண்டும். அத்தகைய தவணைத் தொகையின் முதல் இரண்டு தவணைகள் அவர் செலுத்த வேண்டிய மொத்த தொகையில் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாமல் இருக்க வேண்டும். இத்தவணைத்தொகை செலுத்துவதற்கான காலக்கெடு 30.09.2008, 31.03.2009 மற்றும் 30.06.2009 ஆகும்.

7.4. இதற்கான உத்திரவாதப்பத்திரம் ரிசர்வ் வங்கி அல்லது நபார்டு பரிந்துரையின்படி இருக்க வேண்டும்.

7.5. ஒரே தவணைத்தீர்வு அடிப்படையில் மத்திய அரசு வழங்கும் நிவாரணத்தொகை, இதர விவசாயி தனது பங்குக்கடன் தொகை முழுவதும் செலுத்திய பின்னரே அவர் கணக்கில் வரவு வைக்கப்படும்.

7.6. குறுகியகால உற்பத்திக்கடனைப் பொறுத்தவரை, இதர விவசாயி தனது பங்களிப்பில் மூன்றில் ஒரு பங்கைச் செலுத்திய பின்பு புதிய குறுகியகால உற்பத்திக் கடன் பெறத் தகுதி உடையவராவார்.

7.7. முதலீட்டுக் கடனை பொறுத்தவரை (நேரடியாக விவசாயத்திற்கோ அல்லது விவசாயம் தொடர்புடைய செயல்களுக்கோ) தேவையான முதலீட்டுக்கடன் பெறுவதற்கு இதரவிவசாயி தனது பங்களிப்பு முழுமையும் செலுத்தியிருக்கவேண்டும்.

7.8. ஷெட்யூல்ட் வர்த்தக வங்கி, நகர்புற கூட்டுறவு வங்கி, லோக்கல் ஏரியா வங்கி ஆகியவற்றைப் பொறுத்தவரை இத்திட்ட அமலாக்கத்தை ரிசர்வ் வங்கி கண்காணிக்கும். மண்டல கிரமிய வங்கி மற்றும் கூட்டுறவு கடன் அமைப்புகளுக்கு நபார்டு வங்கி மேற்பார்வையாளராக இருக்கும்.

## 8. வட்டி மற்றும் இதர கட்டணங்கள்:

8.1. கடன் வழங்கிய நிறுவனங்கள் 29.02.2008க்கு பின்னர் தகுதித்தொகை மீது எவ்வித வட்டியும் விதிக்ககூடாது. எனினும், 30.06.2009க்குள் தகுதித்தொகையில் தமது பங்கைச் செலுத்தாத இதர விவசாயிகளுக்கு ஒரே தவணைத்தீர்வு சலுகை கிடைக்காது. மேலும் 30.06.2009க்கு மேல் அந்த காலத்திற்குரிய வட்டியை வங்கிகள் போட வேண்டும்.

8.2. 31.12.2007க்கு மேல் நிலுவையில் உள்ள முதலீட்டுக்கடன் தவணைத்தொகையை கடன் வழங்கிய நிறுவனங்கள் வட்டியுடன் வசூலிக்கலாம். எனினும், தேவையான இனங்களில் தவணைத்தொகைகளை கடன் வழங்கிய நிறுவனங்கள் தங்களது நடைமுறைக் கொள்கைகளுக்கு ஏற்ப திருத்தி அல்லது மாற்றி அமைக்கலாம்.

8.3. இத்திட்டத்தின் விதிமுறைகளில் கண்டுள்ள எந்த விதியையும் தவிர்த்து, கடன் வழங்கிய எந்த ஒரு அமைப்பும் மத்திய அரசிடமிருந்து கேட்கும் வட்டித் தொகை எக்காரணம் கொண்டும் கடன் அசல்தொகைக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

8.4. மத்திய நிதி அமைச்சகம், கடன் வழங்கும் அமைப்புகளுக்கு அவ்வப்போது தேவையான விளக்கங்களையும், கூடுதல் அறிவுரைகளையும், விவசாயி அல்லது மத்திய அரசிடமிருந்து பெறக்கூடாத வட்டித் தொகை அல்லது இதர கட்டணங்களைக் குறித்து தேவையான தெளிவுரைகளையும் வழங்கும்.

## 9. கடன் தள்ளுபடி அல்லது கடன் நிவாரணச் சான்று வழங்கல்:

9.1. குறு மற்றும் சிறு விவசாயிகளைப் பொறுத்தவரை கடன் வழங்கிய நிறுவனங்கள் தள்ளுபடி செய்யப்பட்ட கடன் தகுதித்தொகையைக் குறிப்பிட்டு கடன் தள்ளுபடி செய்யப்பட்டதாக ஒரு சான்று வழங்கவேண்டும்.

9.2. இதர விவசாயிகளைப் பொறுத்தவரை, அவர்களுக்கு ஒரு தவணைத் தீர்வு வழங்கியவுடன் கடன் வழங்கிய நிறுவனம் கடன் முழுவதும் திருப்திகரமாக பைசல் செய்யப்பட்டதாகவும், விவசாயி செலுத்திய பங்களிப்புத்தொகை, கடன் தகுதித்தொகை ஆகியவற்றைக் குறிப்பிட்டு ஒரு சான்று வழங்க வேண்டும்

9.3. ரிசர்வ் வங்கி அல்லது நபார்டு குறிப்பிடும் படிவத்தில் இச்சான்று வழங்கப்படுவதுடன், இதனைப் பெற்றுக்கொண்டதற்கான ஒப்பமும் விவசாயியிடமிருந்து பெறவேண்டும்.

## 10. கடன் வழங்கு நிறுவனங்களின் கடமைகள்:

10.1. இத்திட்டத்தின் கீழ் தயாரிக்கப்படும் கடன் தள்ளுபடி அல்லது கடன் நிவாரணம் வழங்குவதைக் குறித்த தகவல் பட்டியல் அனைத்தும் சரியானவைகளாகவும், உண்மையானவையாகவும் இருக்கின்றன என்பதை கடன் வழங்கும் நிறுவனம் ஒவ்வொன்றும் உறுதி செய்து பொறுப்பேற்க வேண்டும். இந்நிறுவனங்கள் வைத்திருக்கும் ஆவணங்கள், பட்டியல்கள், இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சான்று ஆகிய அனைத்தும் கடன் வழங்கும் நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற ஒரு அலுவலரால் கையொப்பமிடப்பட வேண்டும்.

10.2. குறிப்பிட்ட கடன் வழங்கும் நிறுவனத்தின் கிளைகள் எண்ணிக்கை அடிப்படையில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் கடன் வழங்கும் நிறுவனம் இத்திட்டத்தின் கீழ் குறைதீர்க்கும் அதிகாரிகளை நியமிக்க வேண்டும்

குறைதீர் அலுவலரின் பெயர் மற்றும் முகவரி ஒவ்வொரு கிளையின் அறிவிப்புப் பலகையிலும் ஒட்டப்பட வேண்டும். குறைதீர் அலுவலருக்கு பாதிக்கப்பட்ட விவசாயியிடமிருந்து முறையீடுகளைப் பெறவும் அவற்றின் மீது தீர்ப்பு வழங்கவும் அதிகாரம் உண்டு. அவரின் தீர்ப்பே இறுதியானதாகும்.

10.3. கடன் தள்ளுபடி அல்லது நிவாரணம் பெறுபவர்கள் பட்டியலில் (பத்தி 7.1ல் குறிப்பிட்டுள்ளபடி)தம் பெயர் இடம் பெறாவிட்டாலோ அல்லது தவறான பட்டியலில் தன் பெயர் இடம் பெற்றுள்ளது என்று கருதினாலும், அல்லது தனக்கு வழங்கப்பட்ட நிவாரணம் சரியாகக் கணக்கிடப் பெறவில்லை என்று கருதினாலோ பாதிக்கப்பட்ட விவசாயி தான் கடன் பெற்ற நிறுவனக் கிளையிலோ அல்லது நேரடியாக குறைதீர் அலுவலருக்கோ மேல் முறையீடு செய்யலாம். இத்தகைய முறையீடுகள் பெறப்பட்டதிலிருந்து 30 நாட்களுக்குள் பைசல் செய்யப்பட வேண்டும்.

## 11. தணிக்கை

கடன் தள்ளுபடி அல்லது கடன் நிவாரணம் வழங்கிய ஒவ்வொரு கடன் வழங்கும் நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்களும் குறிப்பிட்ட கிளைகளின் கணக்குப் புத்தகங்களும் ரிசர்வ் வங்கி அல்லது நபார்டு வங்கி நிர்ணயிக்கும் நடைமுறைகளுக்கு ஏற்பத் தணிக்கை செய்யப்படும். இத்தகைய தணிக்கைகள் உடனுக்குடனோ, சட்ட சர்வ தணிக்கையாளராலோ அல்லது சிறப்பு தணிக்கையாளராலோ ரிசர்வ் வங்கி அல்லது நபார்டு வங்கி விதிமுறைகளின்படி மேற்கொள்ளப்படும். மத்திய அரசு விரும்பினால் குறிப்பிட்ட கடன் வழங்கு நிறுவனம் அல்லது அதன் குறிப்பிட்ட கிளை அல்லது கிளைகள் சிறப்புத்தணிக்கை மேற்கொள்ள ஆணையிடலாம்.

## 12. விளம்பரம்:

12.1. இந்த திட்டத்தின் ஆங்கில மொழி மற்றும் குறிப்பிட்ட மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்தின் அதிகார மொழி ஆகியவற்றிலான பிரதிகள் கடன் வழங்கும் நிறுவனத்தின் ஒவ்வொரு கிளைகளிலும் ஒட்டப்பட வேண்டும்.

12.2. இத்திட்டத்தின் நகல் மத்திய நிதியமைச்சகத்தின் இணையதளம், ரிசர்வ் வங்கியின் இணையதளத்திலும் கிடைக்கும்.

## 13. சந்தேகங்கள் மற்றும் இடர்களைக் களையும் அதிகாரம்:

13.1. இத்திட்டம் குறித்து ஏதேனும் சந்தேகங்கள் ஏற்பட்டாலோ, குறிப்பிட்ட பத்தி குறித்து தவறான கருத்து ஏற்பட்டாலும் அவற்றை மத்திய அரசு தெளிவுபடுத்தும். மத்திய அரசின் முடிவே இறுதியானதாகும்.

13.2 இத்திட்ட அமலாக்கத்தில் ஏதேனும் சிக்கல்கள் அல்லது இடர்பாடுகள் ஏற்பட்டாலோ இத்திட்டத்தில் குறிப்பிட்ட நடைமுறைகளை அல்லது அதுகுறித்த உத்தரவுகளை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டாலும் அதனைத் தீர்ப்பதற்குத் தேவையான விளக்கங்கள் அளிக்கவும், சந்தர்ப்பத்திற்கேற்ப சிக்கல்களைத்தீர்க்கும் வகையில் ஆணைகள் பிறப்பிக்கவும் மத்திய அரசிற்கு அதிகாரம் உண்டு.

14. கண்காணிப்பு:

இத்திட்ட அமலாக்கத்தை மேற்பார்வை செய்வதற்காக தேசிய அளவில் ஒரு கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது. அதன் உறுப்பினர்கள் வருமாறு:

1) செயலாளர், நிதிசார்ந்த சேவைத்துறை, நிதி அமைச்சகம் - தலைவர்.

2) செயலாளர், விவசாயம் மற்றும் கூட்டுறவுத்துறை, விவசாய அமைச்சகம்

3) துணை ஆளுநர், ரிசர்வ் வங்கி

4) தலைவர், நபார்டு

5) இரு பொதுத்துறை வங்கிகளின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்கள்

6) இரு மண்டல கிராமிய வங்கித் தலைவர்கள்

7) இரு மாநில அளவிலான கூட்டுறவு வங்கிகளின் தலைவர்கள்